2011 ஆகஸ்ட் 16]

அளிக்கப்பட்டு வருவதால் மதுரையிலிருந்து விமானங்களை இயக்குவதற்குத் தற்போது சாத்தியம் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த முறை ஹஜ் பயணிகளுக்காக மேலும் இரண்டாயிரம் இடங்கள் அதிகமாக ஒதுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி இரண்டு கடிதங்களை எழுதியுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)* Time *ஆகிவிட்டது.* Demand*—க்குப் போக வேண்டும்.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிவிப்புகள்

(அ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) இன்றைக்கு* Agenda*—படி போக வேண்டும். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 4—8—2011 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க 23—8—2011 மற்றும் 24—8—2011 ஆகிய நாட்களில் விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 22—காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 23—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன 24—8—2011 அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும். 5—9—2011 அன்று எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் 14—9—2011 அன்று எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 41—வருவாய்த் துறை மற்றும் மானியக்*

கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன 23–8–2011 அன்று பேரவையில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைப் பேரவையின் ஒப்புதலுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மானியக் கோரிக்கைகள், 2011–2012, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழிதல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of clause 3 of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the financial year 2011–2012." *(குறுக்கீடு)*

3. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்

கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, மானியக் கோரிக்கை எடுத்தாகிவிட்டது.* Please. *(குறுக்கீடு)*

4. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று தமிழ் இளைஞர்களுடைய கருணை மனுக்கள் நிராகரிக்கப்பெறும் வேளையில்..*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நாளைக்குப் பார்க்கலாம். (குறுக்கீடு) நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.* Reply *வரட்டும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாங்கள் கொடுத்த அறிவிப்புகள் என் ஆய்வில் உள்ளன. அவை குறித்து என் அறைக்கு வந்து பேசலாம், உட்காருங்கள்.*